**தலைப்பு 121 – உள்நாடடலுவல்கள் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 121 – உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 யூலை 04 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

---

அமைச்சிற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 24,690.17 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 21,700.51 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 2,989.66 மில்லியன் அதாவது 12.11 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 7,983.61 | 7,354.34 | 629.27 | 7.88 |
| மூலதனம் | 16,706.56 | 14,346.17 | 2,360.39 | 14.13 |
| மொத்தம் | 24,690.17 | 21,700.51 | 2,989.66 | 12.11 |

## 2.2 வருமானக் கணக்குகள்

**மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

அமைச்சினால் 2015 ஆம் ஆண்டிற்காக வருமானக் குறியீடு 10.03.07.99 இற்காக ரூபா 128 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 152 கூட்டுத்தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. இது மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 119 சதவீதமாக இருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமானக் குறியீடு | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | மிகை மதிப்பீட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | மிகை | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 10.03.07.99 | 128.00 | 152.19 | 24.19 | 18.90 |

## 2.3 முற்பணக் கணக்கு

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சிற்குரிய 12101 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 30.00 | 27.06 | 1.20 | 170.36 | 350 | 288.07 |

## 2.4 வைப்புக் கணக்கு

அமைச்சின் கீழ் வருகின்ற 04 வைப்புக் கணக்குகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 7.15 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 6000/0000/00/0016/0070/000 | 1.43 |
| 6000/0000/00/0001/0091/000 | 0.12 |
| 6000/0000/00/0013/0081/000 | 0.39 |
| 6000/0000/00/0002/0121/000 | 5.21 |
| மொத்தம் | 7.15 |

## 2.5 கணக்காய்வு அவதானிப்பு

உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

## 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

அமைச்சினால் கீழே குறிப்பிடப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (அ) | இழப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 |
| (ஆ) | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 |

## 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

### 3.2.1 பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 09 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 45,200,000 கூட்டுத்தொகையான நிதிஏற்பாடுகள் முழுவதும் பயன்படுத்தப்படாது சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 37 செலவின விடயங்களுக்காக மிகை நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்கள் அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 30 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

## 3.3 வருமானக் கணக்கு

அமைச்சின் செயலாளர் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராக 10-3-07-99 ஆம் வருமானக் குறியீட்டிற்குரிய வருமானமான மதிப்பீட்டைத் தயாரித்தல், வருமானத்தைச் சேகரித்தல், கணக்கீடு செய்தல் மற்றும் கணக்குகளைச் சமர்ப்பிக்கும் கடமைகள் என்பன கையளிக்கப்பட்டிருந்தன. அந்த வருமானக் குறியீட்டிற்குரியதாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் வருமானக் குறியீட்டிற்குரிய ரூபா 128 மில்லியன் வருமானமொன்றைச் சேகரிப்பதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதிவரையில் ரூபா 152 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருருந்தது. அது மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 118.75 சதவீதமாக இருந்தது. மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் மூலம் சேவை நாடுனர்களின் தேவையின் அடிப்படையில் விநியோகிக்கப்பட்ட மாதாந்த

வருமானச் சான்றிதழ், வருடாந்த வருமானச் சான்றிதழ், பெறுமதிச் சான்றிதழ் மற்றும் அனுமதிப்பத்திர பிரதிகளுக்காக அறவிடப்படுகின்ற கட்டணங்கள் மூலம் சேகரிக்கப்படுகின்ற வருமானம் அதிகரித்தமையின் காரணமாக மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தை விஞ்சி வருமானமொன்றை சேகரிப்பதற்கு முடியுமாக இருந்தது.

(ஆ) எவ்வாறாயினும் முன்னைய ஆண்டின் உள்ளபடியான வருமானத்தைவிட மீளாய்வாண்டில் உள்ளபடியான வருமானத்தின் குறைவு ரூபா 8 மில்லியனாக இருந்தது. 10 மாவட்ட செலவினங்களினால் உழைக்கப்பட்ட வருமானங்களில் குறைவு 9 சதவீதம் முதல் 93 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டதுடன், அந்த வருமானத்தை சேகரிக்கும் சதவீதம் குறைவடைந்தமைக்கு தாக்கமளித்த விடயங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 128(2) இன் பிரகாரம் அரையாண்டு வருமான அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

12101 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 32,724,365 ஆக இருந்ததுடன் அந்த நிலுவைக் கடன் மீதிகள் தொடர்பான காலப்பகுப்பாய்வொன்று சமர்ப்பிக்கப்படவில்லை. அந்த நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது 8 உத்தியோகத்தரிடமிருந்து கடன் மீதிகள் இன்றி ரூபா 62,244 தொகையான இடர் கடன் மற்றும் விழா முற்பண கடன் தவணைப் பணமாக அறவிடப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(இ) யாழ்ப்பாண மாவட்டத்திற்குரிய பிரதேச அலுவலகங்களில் கடன் மீதிகள் வகைப்படுத்தப்பட்டு இணக்கக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

#### 3.5.1 உள்ளகக் கணக்காய்வு

அமைச்சிற்கான பிரதான உள்ளகக் கணக்காய்வு பதவியொன்றும் (இ.க.சே.I) உள்ளகக் கணக்காய்வாளர் பதவியொன்றும் (இ.க.சே.II/III) அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்காக அப்பதவிகள் வெற்றிடங்களாக காணப்பட்டதுடன் உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்றும் தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.5.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

ஆகக் குறைந்தது காலாண்டிற்கு ஒரு தடவை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டம் நடாத்தப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

வேறு நிறுவனங்களுக்குச் சொந்தமான 13 வாகனங்கள் முறையாகப் கையேற்கப்படாது அமைச்சினால் பயன்படுத்தப்பட்டிருந்தன.

**3.7 செயலாற்றல்**

2015 ஆம் ஆண்டின் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் அமைச்சின் செயல் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) அமைச்சினால் தயாரிக்கப்பட்டிருந்த வருடாந்த செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக அமுல்படுத்தப்பட்ட செயற்பாடுகளில் நிதிசார் மற்றும் பௌதீக செயல்முன்னேற்றம் காண்பிக்கப்பட்டிரூந்த போதிலும், அப்பெறுமதிகளை உறுதிப்படுத்திக்கொள்வதற்கான அடிப்படையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையினால் அதன் செயல்முன்னேற்றத்தின் சரியான தன்மையினை உறுதிப்படுத்திக் கொள்ளமுடியாதிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் 06 நோக்கங்கள் அமுல்படுத்தப்பட்டு அதன் நிதிசார் மற்றும் பௌதீக செயல் முன்னேற்றம் 70 சதவீதமாக இருந்தமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் போது உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.8 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 30 | 17 | 13 |
| (ii) | மூன்றாம் நிலை | 06 | 02 | 04 |
| (iii) | இரண்டாம் நிலை | 156 | 131 | 25 |
| (iv) | ஆரம்ப நிலை | 71 | 52 | 19 |
| | மொத்தம் | 263 | 202 | 61 |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றன.

அமைச்சினால் அமைச்சின் பதவியணியினர்களுக்கும் மீளாய்வாண்டின் போது கையேற்கப்பட்ட 15,639 பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கும் ரூபா 7,121,055,834 தொகையான சம்பளமும் வேதனமும் செலுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 182,384,468 தொகையான சம்பளக் கடன் முற்பணமும் வழங்கப்பட்டிருந்தது. கையேற்கப்பட்ட மேற்கூறப்பட்ட பதவியணியினரை உள்ளடக்கிய அமைச்சின் பதவியணியினருக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.